KG

# தி கோவை மெயில்

வாழ்க வையகம்

தமிழ் & ஆங்கில வார இதழ்

வாழ்க வளமுடன்

50th YEAR GOLDEN JUBILEE

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 41 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | ஞாயிறு, ஜன 7 - 13, 2024, 8 பக்கங்கள், ₹ 5/- | ஆண்டு சந்தா - ₹ 260/-

## 50 வருட மகத்தான மருத்துவ சேவை

# ‘பொன் விழா’ கண்ட கே.ஜி.மருத்துவமனை



டாக்டர் ஜி.பக்தவத்சலத்திற்கு ‘இகிகாய்’ விருது வழங்கிய கே.ஜி. மருத்துவமனை மருத்துவர்கள். உடன், கே.ஜி. மருத்துவமனை நிர்வாக அறங்காவலர் அசோக் பக்தவத்சலம் மற்றும் சிறப்பு விருந்தினர்கள்.

✍ **ப.சுகன்யா,** தி கோவை மெயில்

தொழில் நகரம் என்கின்ற அடையாளத்துடன் அழைக்கப்பட்ட கோயம்புத்தூர் மாநகரை மருத்துவ மையமாக மாற்றியமைத்த பெருமை கே.ஜி. மருத்துவமனை தலைவர் டாக்டர் ஜி.பக்தவத்சலத்துக்கு உண்டு. 1974 ஆம் ஆண்டு 10 படுக்கைகள் கொண்ட சிறிய மருத்துவமனையாகத் தொடங்கப்பட்ட கே.ஜி. மருத்துவமனை ‘ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றிய ஆலமரம்போல்’ தழைத்தோங்கி நிற்கிறது என்றால் அது மிகையல்ல.

தற்போது பல்நோக்கு மருத்துவமனைகள் பல இருந்தாலும், அவற்றுக்கெல்லாம் முன்னோடியாக நவீனத் தொழில்நுட்பங்கள், நவீன மருத்துவம் ஆகியவற்றை உட்புகுத்தி சிறந்த மருத்துவ சேவையை கே.ஜி. மருத்துவமனை வழங்கி வருகிறது. இத்தகைய பெருமைக்குரிய மருத்துவமனையின் பொன்விழா ஆண்டு கொண்டாட்ட நிகழ்ச்சி அண்மையில் பிரபல தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.

### ‘இகிகாய்’ விருது

பொன் விழா ஆண்டு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக டாக்டர் ஜி. பக்தவத்சலத்திற்கு கே.ஜி. மருத்துவமனை மருத்துவர்கள் ‘இகிகாய்’ விருது வழங்கி கௌரவித்தனர். ஜப்பானியர்களின் நீண்டகால மகிழ்ச்சிக்கான வாழ்க்கை ரகசியமாக இருக்கிறது ‘இகிகாய்’ தத்துவம்.

‘இகிகாய்’ என்கின்ற இந்த ஜப்பானிய வார்த்தையைத் தமிழில் ‘வாழ்க்கையின் பொருள்’ என்று கூறலாம். தினமும் காலையில் எழும்போது எது உங்களை உற்சாகமாகவும் ஊக்கத்துடனும் செயல்பட வைக்கிறதோ, அதுவே உங்கள் வாழ்வின் அப்போதைய நோக்கம். டாக்டர் ஜி.பக்தவத்சலத்தின் துடிப்பான பேச்சுக்கும், நேர்மறையான சிந்தனைக்கும், அவரின் சுறுசுறுப்பு மற்றும் உத்வேகத்துடன்கூடிய ஆற்றலுக்காக இவ்விருது வழங்கி சிறப்பித்தனர் கே.ஜி. மருத்துவமனை மருத்துவர்கள்.

### வியப்பில் ஆழ்த்துகிறது

**மகேஷ் வர்மா,**
**அவைத்தலைவர்,**
**மருத்துவமனை மற்றும் சுகாதார தேசிய தர நிர்ணய அங்கீகார வாரியம்**



‘சுகாதார சேவையைத் தாண்டி ஸ்கூல் ஆஃப் நர்சிங், அலைடு ஹெல்த் சயின்ஸ், பிசியோதெரபி என மருத்துவக் கல்வித் துறையிலும் கே.ஜி. குழுமம் சிறப்பாக செயலாற்றி வருகிறது. டாக்டர் ஜி.பக்தவத்சலத்தின் தொலைநோக்கு பார்வை என்னை வியப்பில் ஆழ்த்துகிறது. தனிப்பட்ட ஒருவரால் இது எப்படி சாத்தியமாகும் என்று ஆச்சரியப்பட வைக்கிறது. அவரின் நேர்த்தியான கடின உழைப்பு, உயர்ந்த சிந்தனை, சமூக அக்கறை கே.ஜி. மருத்துவமனையின் வளர்ச்சியில் பிரதிபலிக்கிறது’.

### நீளும் நற்குண பட்டியல்கள்

**கிர்தர் ஞானி,**
**பொது இயக்குநர்,**
**அசோசியேஷன் ஆஃப் ஹெல்த்கேர் புரொவைடர்**



‘இந்தியா போன்ற நாடுகளில் சுகாதாரத் துறையைக் கட்டமைப்பது மிகவும் சவாலான ஒன்று. சென்னை, கேரளா, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் சுகாதாரத் துறை சிறப்பாகச் செயல்படுகிறது. அதிலும், கே.ஜி. மருத்துவமனை தனித்துவமான செயல்பாடுகளால் உயர்ந்து வருகிறது. பிரதமர் நரேந்திர மோடி தினந்தோறும் அதிகாலை நான்கு மணியளவில் அன்றைய நாள் வேலைகளைச் செய்யத் தொடங்குவார். அவருக்கு அடுத்தபடியாக டாக்டர் ஜி.பக்தவத்சலம் இருக்கிறார். அவரின் எதார்த்தமான பேச்சு, எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்யும் உதவிகள் என அவரின் நற்குணப் பட்டியல்கள் நீளும்’.

### பாராட்டுக்குரிய மனிதர்


**மீனு பாஜ்பாய்,**
**துணைத் தலைவர்,**
**மருத்துவ அறிவியல் தேசிய தேர்வு வாரியம்**



‘உலக அளவில் மருத்துவம், செவிலியர் உள்ளிட்ட சுகாதாரத் துறை சார்ந்த பிரிவுகளில் மனிதவள தேவைகள் அதிகரித்துள்ளன. இதைக் கருத்தில்கொண்டு, நிதி ஆயோக் மற்றும் தேசிய மருத்துவ ஆணையத்திடம் ஆலோசித்து மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்புகளை அதிகரித்திருக்கிறோம். கே.ஜி. மருத்துவமனை சார்பில் நடத்தப்படும் மருத்துவ முகாம்கள் மூலம் மக்களிடம் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் டாக்டர் ஜி.பக்தவத்சலம் பாராட்டுக்குரிய மனிதர்’.

## புதியதொரு அத்தியாயம் தொடங்குவோம்!

**- அசோக் பக்தவத்சலம்,** நிர்வாக அறங்காவலர், கே.ஜி. மருத்துவமனை



கே.ஜி. மருத்துவமனை நிர்வாக அறங்காவலர் அசோக் பக்தவத்சலம் வரவேற்புரை வழங்கி பேசியதாவது, ‘மருத்துவத் துறையில் மகத்தான சாதனைகள் படைத்துவரும் கே.ஜி. மருத்துவமனையின் வெற்றிக்கு உறுதுணையாக டாக்டர் ஜி.பி. இருக்கிறார். அவரின் தனித்துவமான அணுகுமுறையானது மருத்துவர்களையும், செவிலியர்களையும் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணிபுரிய வைக்கிறது. இங்கு, 85 லட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கியிருக்கிறோம். கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு, கொரோனா பெருந்தொற்று உள்ளிட்ட இக்கட்டான சூழ்நிலைகளில் பலரும் தயங்கி ஒரு அடி பின் நின்றபோது துணிந்து செயல்பட்டு, உன்னத சேவையாற்றினோம்.

இங்கு வரும் அனைத்து தரப்பினருக்கும் சர்வதேச தரத்தில் பாதுகாப்பான மற்றும் மலிவான சிகிச்சையை வழங்கி வருகிறோம். சுகாதாரத் துறையில் புதியதொரு அத்தியாயத்தைத் தொடங்க, படைக்க என்றுமே முயன்று வருகிறோம். மேலும் இங்கு சிகிச்சைக்கு வரும் அனைவரிடத்திலும் தனிப்பட்ட கவனம் செலுத்தி எங்கள் நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களாகக் கருதி பணியாற்றக் கற்றுத்தந்த எனது தந்தையின் உந்துதல் கே.ஜி. மருத்துவமனையின் வளர்ச்சிக்கான அடித்தளம்’ என்றார்.

## சமூக அர்ப்பணிப்புடன் சுகாதார சேவை!

**- டாக்டர் ஜி.பக்தவத்சலம்,** தலைவர், கே.ஜி. மருத்துவமனை



கடந்த 50 ஆண்டுகளில் கே.ஜி. மருத்துவமனையின் வளர்ச்சிக்கான அற்புதமான பயணத்தில் எனது பங்களிப்பு இருக்கிறது என்று எண்ணுகையில் மட்டற்ற மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார் கே.ஜி. மருத்துவமனை தலைவர் டாக்டர் ஜி.பக்தவத்சலம்.

தொடர்ந்து அவர், ‘10 படுக்கைகளுடன் ஆரம்பித்த இந்த மருத்துவமனையில் தற்போது மிகவும் சிறப்பு வாய்ந்த மற்றும் பரவலாக அணுகப்படாத மருத்துவத்தின் மேம்பட்ட நிலைகளைக் குறிக்கும் வகையில் மூன்றாம் நிலை சிகிச்சைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதாவது, குவாட்டர்னரி கேர் இங்கு உள்ளது. பொதுவாக மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தேசிய அல்லது சர்வதேச மையங்களில் மட்டுமே இது வழங்கப்படுகிறது. மருத்துவமனை ஆரம்பிக்கும்போது பொது மருத்துவம் என்கின்ற ஒரு துறையுடன் ஆரம்பித்தோம்.

ஆனால், தற்போது இது விரிவடைந்து 84 துறைப் பிரிவுகளாக செயல்பட்டு வருகிறது. கே.ஜி. மருத்துவமனை பல தனித்துவமான மருத்துவ சாதனைகளைக் கொண்டுள்ளது என்பதற்கு இதுவே சான்று. கூடவே, மருத்துவத்துறை சார்ந்த இணைப் படிப்புகளும் வழங்கி வருகிறோம். இந்த சிறந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்குப் பின்னால் ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளனர். சமூகத்திற்கு அர்ப்பணிப்புடன் தரமான சுகாதார சேவையைத் தொடர்ந்து வழங்குவோம் என்று உறுதியளிக்கிறோம்’ என்றார்.



டாக்டர் ஜி.பக்தவத்சலம், தேசிய தர நிர்ணய அங்கீகார வாரிய அவைத் தலைவர் மகேஷ் வர்மா, அசோசியேஷன் ஆஃப் ஹெல்த்கேர் புரொவைடர் சங்கப் பொது இயக்குநர் கிர்தர் ஞானி மற்றும் மருத்துவ அறிவியல் தேசிய தேர்வு வாரியத்தின் துணைத் தலைவர் மீனு பாஜ்பாய் ஆகியோர் இணைந்து ரோபோடிக் அறுவை சிகிச்சைக் கருவியை அறிமுகப்படுத்தினர். உடன், அசோக் பக்தவத்சலம், அவந்திகா, மருத்துவர்கள் அருண்குமார் மற்றும் கல்யாண சுந்தர பாரதி.

## ரோபோடிக் அறுவை சிகிச்சை கருவி அறிமுகம்

நவீன மருத்துவத் தொழில்நுட்பத்தில் பல்வேறு பரிணாமங்களைக் கொண்ட கே.ஜி. மருத்துவமனையின் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு எம்.ஆர்.ஐ., சி.டி., ஸ்கேன் உள்ளிட்ட உயர்தர மருத்துவ நுட்பங்களுடன் செயல்பட்டு வருகிறது. இத்துறையை மேலும் மேம்படுத்தும் வகையில், பொன் விழா ஆண்டு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நுண் துளை இருதய அறுவை சிகிச்சைக்கான பிரத்யேக ரோபோடிக் அறுவை சிகிச்சை கருவி அறிமுகம் செய்யப்பட்டது.

டாக்டர் ஜி.பக்தவத்சலம், தேசிய தர நிர்ணய அங்கீகார வாரிய அவைத் தலைவர் மகேஷ் வர்மா, அசோசியேஷன் ஆஃப் ஹெல்த்கேர் புரொவைடர் சங்கப் பொது இயக்குநர் கிர்தர் ஞானி மற்றும் மருத்துவ அறிவியல் தேசிய தேர்வு வாரியத்தின் துணைத் தலைவர் மீனு பாஜ்பாய் ஆகியோர் இணைந்து ரோபோடிக் அறுவை சிகிச்சைக் கருவியை அறிமுகப்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில், கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையின் (கே.எம்.சிஹெச்.) செயல் இயக்குநர் அருண் பழனிசாமி, முன்னணி மருத்துவமனைகளின் தலைவர்கள், மருத்துவர்கள், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் திமுக மாவட்ட செயலாளர் நா.கார்த்திக், மாநகராட்சி துணை மேயர் வெற்றிச்செல்வன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், கே.ஜி. மருத்துவமனையின் முன்னாள், இந்நாள் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சார்பில்

# "எப்போ வருவாரோ" 18வது ஆன்மீக சொற்பொழிவு



இறை தொண்டாற்றியவர்களுக்கு "அருள்வளர் செம்மல் விருது" வழங்கினார் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸின் தலைவர் எம்.கிருஷ்ணன்.



"எப்போ வருவாரோ 2024" சொற்பொழிவு நிகழ்ச்சியின் ஆழித்தேர் மேடை அமைப்பு.

✍ வெ.சீ.அனிஷா, தி கோவை மெயில்

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சார்பில் "எப்போ வருவாரோ" என்ற ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சி ஆண்டுதோறும் கிக்கானி மேல்நிலைப் பள்ளியில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. தற்போது நடைபெற்றுவரும் இதன் 18 வது சொற்பொழிவு நிகழ்ச்சி ஜனவரி 1 ஆம் நாள் "அருள்வளர் செம்மல் விருது" வழங்கும் விழாவுடன் தொடங்கப்பட்டது. இதில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தலைப்பில் பேச்சாளர்கள் தங்களது ஆன்மிக சொற்பொழிவைப் பகிர்வர்.

அருள் தொண்டாற்றும் இறை அன்பர்களான அரன்பணி அறக்கட்டளைத் தலைவர் தியாகராசன், திருப்பூர் சுப்ரீம் குரூப் நிறுவனர் எஸ்.ஏ.ராதாகிருஷ்ணன், திருப்பூர் எஸ்.பி.எஸ்.தாமோதரன், சாவித்திரி தாமோதரன், அன்னூர் ஸ்ரீ ராமானுஜர் பக்த பேரவைச் செயலாளர் திருமூர்த்தி, புன்செய்புளியம்பட்டி அண்ணாமலையார் கோயில் செயலாளர் சிவசெல்வி தனம் (எ) வெங்கிட்டம்மாள் ஐங்கரன் ஆகியோருக்கு "அருள் வளர் செம்மல் விருது" வழங்கப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தலைவர் எம்.கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

### "திருவிளக்கு ஏற்ற ஒரு டின் எண்ணெய்"

பவானி கூடுதுறையைச் சேர்ந்த தியாகராசன், சைவ சித்தாந்தம், பெரிய புராணம் பயிற்றுவிக்கும் ஆசிரியர். இவர் 240 சைவ திருத்தலத்திற்கு திருவிளக்கு ஏற்ற மாதந்தோறும் ஒரு டின் எண்ணெய் 10 வருடங்களாக வழங்கி வருகிறார். மேலும், பல்வேறு சிவன் கோவில்களிலே திருப்பணி செய்து வருகிறார். எனவே, இவருக்கு "அருள் வளர்செம்மல் விருது வழங்கப்பட்டது.

### அரை நூற்றாண்டாக இறைப் பணி

இறைப்பணியே தனது வாழ்க்கையாக வாழ்ந்து வருபவர், 1976 ஆண்டு அன்னூர் மன்னீஸ்வரர் கோவிலின் கும்பாபிஷேகத்திற்கு பொறுப்பேற்று, நல்லுள்ளங்களின் பொருள் உதவியுடன் கும்பாபிஷேகத்தை இறை அருளுடன் நடத்தினார். மேலும், ஸ்ரீ ராமானுஜர் பக்த பேரவையின் செயலாளராகப் பொறுப்பேற்று, 22 வருடங்களாக ராமநவமி விழா, 10 நாட்கள் அன்னதானதுடன் கொண்டாடி மகிழ்வதற்கு இவரின் கடும் உழைப்பும் காரணமாக அமைகிறது. அதன் வகையில், அரை நூற்றாண்டாக தொடர்ந்து இறைப்பணி செய்துவரும் திருமூர்த்தி ஐயாவிற்கு விருது வழங்கப்பட்டது.

### சமயப்பணி சார்ந்த முதல் விருது

சுப்ரீம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸின் நிறுவனரான எஸ்.ஏ.ராதாகிருஷ்ணன், சமுதாயத்திற்கும் திருக்கோவில்களுக்கு பல்வேறு நற்பணி செய்து வருகிறார். பூஜைகள் சரிவர நடைபெறாத கோவில்களுக்கு நிரந்தர பூஜை ஏற்பாடு உபயத்தாரராக இருந்து வருகிறார். சிவராத்திரி நாளில் நலிவுநிலையில் உள்ள 108 சிவன் கோவில்களுக்கு அபிஷேகப் பொருட்களை வழங்கி வருவதோடு, பல்வேறு இறைப் பணிகளை செய்துவரும் இவருக்கு விருது வழங்கப்பட்டது.

### சொந்த செலவில் கோபுர கலசங்கள்

திருப்பூர் அங்கேரிபாளையத்தைச் சேர்ந்த எஸ்.பி.எஸ். தாமோதரன் மற்றும் சாவித்திரி தாமோதரன் ஆகியோர் பாத்திரத் தொழிலால் இறைவனுக்கு சிறப்பு செய்து வருகின்றனர்.

கோவிலின் கும்பாபிஷேகத்திற்கான கோபுர கலசங்களை தங்களது சொந்த செலவில் வழங்கி வருகின்றனர். இந்நாள் வரையில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கலசங்கள் வழங்கப்பட்ட இவர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

### முழு ஈடுபாட்டுடன் சிவத் திருப்பணி

புன்செய்புளியம்பட்டி அண்ணாமலையார் கோயில் செயலாளரான சிவசெல்வி தனம் (எ) வெங்கிட்டம்மாள் ஐங்கரன், சிவத் திருப்பணிகளில் முழுமையாக ஈடுபட்டு வருகிறார்.

மேலும், பித்தளை, செம்பு, வெண்கலம், சிறிய அளவில் தங்கம் எனப் பலரிடம் பெற்று ஐம்பொன்னாலான ஆனந்தவள்ளி உடனமர் சந்திரசேகர் திருமேனி செய்து தனது இல்லத்தில் வைத்து 40ற்கும் மேற்பட்ட மகளிரைக் கொண்டு மாதந்தோறும் பௌர்ணமி பூஜை செய்து சிறப்பித்து வரும் இவருக்கு விருது வழங்கப்பட்டது.

## அனுபவங்களால் உணர்வதே ஆன்மிகம்!



முதல் நாள் நிகழ்வில் பாம்பன் சுவாமிகள் குறித்து பேச்சாளர் பாரதி பாஸ்கர் பேசியதாவது;

'பாம்பன் சுவாமிகள் வாழ்வில் முருகர் அருள்புரிந்தது, தற்போதைய ஆண்டோடு நூற்றாண்டுகள் ஆகிறது. 1923 டிசம்பர் 27ம் நாள் சென்னை தம்புசெட்டி தெருவில் நடந்து சென்ற ஸ்வாமிகளின் மீது ஜட்கா வண்டிச் சக்கரம் இடித்து கால் எலும்பு முறிந்துபோனது. மருத்துவர்கள் கைவிட்டாலும், முருகப்பெருமான் கைவிடவில்லை. தினமும் பாடிய 'சண்முகக் கவசம்' அவரைக் காத்தது. அந்த அளவிற்கு பாம்பன் சுவாமிகள் முருகர் மீது பற்று வைத்திருந்தார்.

ஆன்மிகத்தை அறிவியல் பரிசோதனையால் பார்க்க முடியாது. பொதுவில் செய்யப்படுவது அறிவியல் பரிசோதனை. ஆனால், ஆன்மிக அனுபவங்கள் என்பது அப்படி அல்ல. அவை ஒவ்வொருவருக்கும் தனித்துவம் கொண்ட அனுபவத்தினால் மட்டுமே உணர முடியும்.

ஆன்மிக அனுபவங்களை எல்லாரும் புரிகின்ற அளவில், சொல்லுகின்ற சக்தியோடு கடவுள் சிலரை படைத்திருக்கிறார். அவர்களே அடியாளர்கள். அத்தகையோரைப் பற்றி பேசுவபதற்குத்தான் இந்த அவை. எல்லோரும் சொல்லுகிறபோது, அனுபவங்களை நாம் உள்வாங்கிக் கொள்வதைவிட, அடியவர்கள் இந்த அனுபவங்களை பதிவு செய்கிறபோது அது மகத்தான நம்பகத்தன்மையோடு நம் நெஞ்சில் பதிகிறது.

நாம் அல்லற்று நிற்கிற போதும், இருள் சூழ்ந்து இருக்கும் தருணத்திலும், தெய்வம் நமக்காக இறங்கி வரும் எனும் வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கையை பாம்பன் சுவாமிகளின் வரலாறு நமக்கு கூறுகிறது.

அவர் வாழ்க்கையைப் பற்றி எந்தவொரு விமர்சனமும் இல்லாமல், பார்வையாளராக தன்னுடைய வாழ்க்கையைப் பார்த்து வாழ்ந்தவர் ஆவார்' என்றார்.



## சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை

நான்காம் நாள் நிகழ்வில் மரபின்மைந்தன் முத்தையா, திருமூலர் குறித்து பேசுகையில்,

'திருமூலர் வாழ்கையின் நெறிமுறைகள் குறித்து திருமந்திரம் மூலம் நமக்கு அழகாக எடுத்துரைத்திருக்கிறார். எந்திரங்கள், தந்திரங்கள், மூச்சுப் பயிற்சி, ஞானம் போன்றவை குறித்து திருமந்திரம் கூறுகிறது. பூவிற்குள் முழுமையாக வாசனை இருப்பதுபோல் நம்முடைய ஜீவனுக்குள் முழுமையாக சிவபெருமான் இருக்கிறார். சதாநேரமும் சிவனை வழிபட்டால் சதாசிவம் என எல்லா நேரங்களிலும் சிவனை வழிபட நாம் கடமைப்பட்டவர்கள் என்கிறார் திருமூலர்.

நம் அடையாளங்களில் இருந்து தள்ளி இருப்பதே திருமந்திரத்தை கேட்பதின் பயனாகும். உடல் எனும் அடையாளம், நான் என்கிற அடையாளம் என எல்லாவற்றையும் கடந்தால் சிவனே அடையலாம் என்பதற்கு திருமூலரே சிறந்த உதாரணம். சிவனுக்கு ஒப்பாகக் கூறும் தெய்வம் எங்கு தேடினாலும் காண இயலாது.

இறைவன் நம்மை வழிபடுத்துவதற்காக சோதனைகளையும் துன்பங்களையும் நம் வழியில் வைத்திருக்கிறார். தவத்தில் இருப்பவர் கர்மவினையை செய்தால், அந்த வினை அவரை சாராது சிவத்தை சாரும். ஒரு உண்மையான ஞானிக்கு பகல் உணவு கொடுத்தால், அதற்கு நிகராக எவ்வித தர்மமும் இல்லை என்கிறார் திருமூலர்' என்றார்.

## அனைத்திலும் தேடல் அவசியம்

ஐந்தாம் நாள் நிகழ்வில் காஞ்சி மகா பெரியவர் குறித்து மருத்துவர் சுதா சேஷய்யன் பேசுகையில்,

'வாழ்க்கையில் நம்மை ஒழுங்குபடுத்தி, சரியான பாதையில் செல்வதற்கு வழிநடத்துபவர்களே பெரியவர்கள். அப்படி நம்மை வழிநடத்தியவரே காஞ்சி மகா பெரியவர். தான் செய்த அதிசயங்கள், அற்புதங்களால் தன்னை அறிமுகப்படுத்தாமல் இருந்தவர்.

உலகில் வாழ்க்கையை எதிர்கொள்பவர்களுக்கு மட்டுமே தெரியும், ஒன்றை முழுமையாகத் தெரிந்துகொள்ளவில்லை என்றால் அதனைத் தெரிந்துகொண்டு எந்த பயனும் இல்லை என்று. தேடல் என்பது சாதாரண விஷயங்களில்கூட இருந்தால்தான் அதனை முழுமையான அறிவாகக் கருதப்படும் என்பதனை உணர்த்துகிறார். எவர் ஒருவர் கற்றுக்கொள்வதற்கும், புதிதாகத் தெரிந்துகொள்வதற்கும் ஆர்வமாக இருக்கிறார்களோ அவர் எந்நாளும் இளமையாகவே தோன்றுவார் என்கிறார்.

தெய்வம் என்னைப் பார்க்கிறது என்ற எண்ணம் இருக்கும்வரை சமுதாயத்தில் தவறுகள் நடக்காது. தெய்வம் இல்லை எனச் சொல்லத் தொடங்கியபிறகுதான் தவறுகள் கடுமையாக அதிகரிக்கத் தொடங்கின. எனவே கோவில்களில் இருக்கும் சிறிய கதைகளையும், அதன் நம்பிக்கைகளையும் சிதைத்து விடாமல், பராமரியுங்கள். எதை செய்தாலும், முறையாகச் செய்தால் மட்டுமே நம்முடைய இலக்குகளை அடைய முடியும்' என்றார்.



## தமிழிற்கும் தொண்டாற்றியவர் வள்ளலார்

இரண்டாம் நாள் நிகழ்வில் "அருளாளர் வள்ளலார்" என்ற தலைப்பில், ஆன்மிக சொற்பொழிவாளர் ஸ்ரீ கிருஷ்ண ஜகந்நாதன் பேசுகையில்,

'மூன்று சொற்கள் அதற்கு ஓர் வடிவம் கொடுத்தால் அதுவே வள்ளலார். ஜீவ காருண்யம், ஆன்மநேய ஒருமைப்பாடு, மரணமில்லா பெருவாழ்வு ஆகிய மூன்று சொற்களுக்கும் சேர்த்து வடிவம் கொடுத்தால், அதுவே வள்ளலார். இந்த மண்ணுலகில் எப்படி வாழ வேண்டும் என்று நமக்கு பாதை வகுத்தவர். மக்களிடையே இருந்த அவநம்பிக்கையை அகற்ற முதலில் அவர்கள் பசியைத் தீர்க்க வேண்டும் என முடிவெடுத்தார்.

வள்ளலார் ஆன்மிகத்திற்கு மட்டுமல்லாமல் தமிழிற்கு பெருந்தொண்டு செய்துள்ளார். முதன்முதலில் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழி பாடப்பிரிவுகளை கொண்டு வந்தவர் வள்ளலார்.



நம்மால் கேட்க முடியாத ஒலிகளை, இழுத்துக் கொடுத்ததுதான் வேதம். அந்த வேதத்தின் பொருட்களை சொல்வதற்காக ராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்கள் வந்தன. அதன் வகையில் மூன்றாவது இதிகாசம், சிவரகசியம் என வள்ளலார் கூறியுள்ளார்' என்றார்.

## கருணை, இரக்கம் புரிந்தால் ஜே.கே-வை புரிந்து கொள்ளலாம்



மூன்றாம் நாள் நிகழ்வில் பேச்சாளர் கிருஷ்ணா, ஜே.கிருஷ்ணமூர்த்தியைக் குறித்து பேசியதாவது,

'ஜிட்டு கிருஷ்ணனை தத்துவஞானியாகவும், பேச்சாளராகவும், ஒரு சாதாரண மனிதனாகவும் வாழ்ந்து சென்றவர். எந்த பழக்கங்களையும் எடுத்துக்கொள்ளாமல், உண்மையை உண்மையாகவே பேசியவர்.

இவர் இந்தியாவில் பிறந்திருந்தாலும், உலக ஆசிரியராக வலம் வருவதற்கு எந்த கலாச்சாரத்தையும் பின்பற்றாமல் சத்தியம் என்று சாத்தியதோடு நின்று, அதனை போதித்தவர். கருணை, இரக்கத்தை புரிந்துகொண்டால் இவரைப் புரிந்துகொள்ள முடியும். ஜே.கிருஷ்ணமூர்த்தியின் அறிவுரைகள் அனைத்தும், நாம் சாதாரண வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்தே இருக்கும்.

'நீதான் உனக்கு குரு, வெளியில் ஒரு குரு தேவையில்லை' எனக் கூறிய அவரின் கருத்துக்கள் உலகம் முழுமைக்கும் பிரபலமானது. தன்னை நாடி வருபவர்களிடம் ஆறுதலாக மௌனத்தில் அமர்ந்திருக்கவும் செய்தார். ஜே.கேவின் போதனைகள் படிப்பறிவின் அடிப்படையில் பிறந்தவையல்ல, வாழ்வைப் பற்றிய அவரின் உள்ளார்ந்த உணர்வில் மலர்ந்தவை' என்றார்.

ஸ்ரீ அன்னபூர்ணா
ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேடரிங்

தி கோவை மெயில்
10 YEARS
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
தமிழ் & ஆங்கில வார இதழ்

SREE Annapoorna
SREE Gowrishankar
The pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 40 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, ஜன 7 - 13, 2024, 8 பக்கங்கள், ₹ 5/- ஆண்டு சந்தா - ₹ 260/-

# காதம்பரி - 2024

## மார்கழி இன்னிசை மழையில் நனைக்கும் பி.எஸ்.ஜி

✍ **ப.சுகன்யா,** தி கோவை மெயில்

இந்த உலகமே இசைமயமானது. எல்லோருக்கும் புரிகின்ற ஒரு மொழி, இசை. மனிதர்கள் மட்டுமல்ல, அனைத்து உயிரினங்களையும் ஈர்க்கிறது, இந்த இசை. வார்த்தைகளால் நமது உணர்வுகளை வெளிப்படுத்துவதைவிட இசையால், இசையின் வழியில் இலகுவாக வெளிப்படுத்திட முடியும். இந்த இசைக்கு உகந்த மாதம், மார்கழி. கீதையில் கண்ணன் 'மாதங்களில் நான் மார்கழி' என்கிறார். மார்கழியும் இசையும் இணைந்து இருப்பதில் அதிசயம் கிடையாது.


இத்தனை சிறப்புமிக்க மாதத்தில் பி.எஸ்.ஜி. & சன்ஸ் அறக்கட்டளை சார்பாக கடந்த 2017 ஆம் ஆண்டில் இருந்து 'காதம்பரி' எனும் இசை விழா கொண்டாடப்பட்டு வருகிறது. வளர்ந்துவரும் இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், பி.எஸ்.ஜி. கல்வி நிறுவன மாணவர்களின் இசை, நடனம் ஆகிய கலைத் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் ஆண்டுதோறும் பி.எஸ்.ஜி. & சன்ஸ் அறக்கட்டளை நடத்தும் காதம்பரி இசை நிகழ்ச்சி கோயம்புத்தூர் மக்களின் இசை தாகத்திற்கு உணவளிக்கும் அரும்விருந்து.

இந்த ஆண்டிற்கான காதம்பரி-2024 இசைக்கச்சேரி விழாவானது பி.எஸ்.ஜி. மருத்துவக் கல்லூரி கலையரங்கில், ஜனவரி 4ல் தொடங்கி 7ம் தேதி வரை நடைபெற்றது.


கோயம்புத்தூர் விழாவின் ஒரு அங்கமாகவுள்ள இந்நிகழ்ச்சி குறித்து இதன் நிர்வாகிகள் கூறிய கருத்துகள் பின்வருமாறு:

### என்றுமே முதன்மை பெறும்

**எல்.கோபாலகிருஷ்ணன்,** நிர்வாக அறங்காவலர், பி.எஸ்.ஜி. & அறக்கட்டளை



'இயல், இசை, நாடகம் ஆகியவற்றில் முதன்மையானது இசை. இசைக்குப் பிறகே மற்றவை வளர்ந்தன. அன்று முதல் இன்றுவரை நம் அனைவரின் வாழ்க்கையே இசைமயமானதுதான். இசையின் தாத்பரியத்தைக் கொண்ட காதம்பரி ஒரு கர்நாடக இசை விழா ஆகும். கோயம்புத்தூரில் மட்டுமல்லாமல் மற்ற பகுதிகளிலிருந்தும் திறமையான இளம் இசைக்கலைஞர்கள் கச்சேரிகளில் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள். நான்கு நாட்கள் நடத்தப்படும் இந்த நிகழ்ச்சி, பி.எஸ்.ஜி. & சன்ஸ் அறக்கட்டளை சார்பில் என்றுமே முதன்மை பெறுகிறது. மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த ஒரு தனி இடத்தை பி.எஸ்.ஜி. வழங்குகிறது என்று சொன்னால் அது மிகையல்ல. இந்த இளம் இசைக்கலைஞர்கள் தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தி ஒருவருக்கொருவர் ஊக்குவிக்கிறார்கள். கோயம்புத்தூரில் உள்ள இளம் இசைக்கலைஞர்களுக்கு பி.எஸ்.ஜி. மாணவர்கள் ஒரு சிறந்த உத்வேகமாக இருக்கிறார்கள்' என்றார்.



### பணிய வைக்கின்ற ஓர் அருஞ்சாதனம் இசை

**டாக்டர்.புவனேஸ்வரன்,**
**இயக்குநர்,**
**பி.எஸ்.ஜி.மருத்துவமனை**

காதம்பரி நிகழ்ச்சி குறித்து பி.எஸ்.ஜி. மருத்துவமனை இயக்குநர் டாக்டர் புவனேஸ்வரன் கூறியதாவது, 'இசை என்பது ஒரு உலகப் பொது மொழி. இது, சத்தம், ஒலி, சலசலப்பு, இரைச்சல், ரிங்காரம் என அசைவின் மொழியாக இருக்கிறது.

மனிதர்களையும் மற்ற உயிரினங்களையும் பணிய வைக்கின்ற ஓர் அருஞ்சாதனம், இசை ஆகும். மாணவர்களின் கலைத் திறமையை வளர்க்கவும், கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு வர வேண்டும் என்ற எண்ணத்திலும் ஒவ்வொரு ஆண்டும் இந்த கலை நிகழ்ச்சியை நடத்தி வருகிறோம்' என்றார்.





### கண்கள், செவிகளுக்கு 'திகட்டா விருந்து'!

காதம்பரி இசை நிகழ்ச்சியின் முதல் நாளில் 'பஞ்சபூதம்' என்ற தலைப்பில் பரதநாட்டிய நிகழ்ச்சி நடந்தது.

இதில், பி.எஸ்.ஜி. குழுமத்தைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் தங்கள் நடனத் திறமைகளை நேர்த்தியாக வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் பார்வையாளர்களின் கண் இமைகளை மூட விடாமல் தங்கள் நடனங்களால் நிறுத்திவிட்டனர்.

குறிப்பாக, பி.எஸ்.ஜி. கலை, அறிவியல் கல்லூரி மாணவர்கள் அரங்கேற்றிய அறுபடை அழகன் முருகனின் நாடகக் கதையாடல் நிகழ்ச்சி அனைவரையும் வெகுவாக கவர்ந்தது. நடன நிகழ்ச்சிக்குப் பிறகு, 'ஜனரஞ்சகம்' என்ற தலைப்பில் பரத் சுந்தர் குழுவினர் வழங்கிய கர்நாடக இசைக் கச்சேரி செவிகளுக்கு விருந்தாக அமைந்தது.

### கால்கள் தாளம் தட்ட, கரகோஷ ஒலியால் அரங்கம் 'அதிர்ந்தது'!

காதம்பரி இசை நிகழ்ச்சியின் இரண்டாம் நாளில், 'பாட்டினைப்போல் விந்தை பாரின்மிசை இல்லையடா' என்ற பாரதியின் வரிகளுக்கு இணங்க, பி.எஸ்.ஜி. கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் வழங்கிய 'பரிணாமம்' என்ற தலைப்பில் மெல்லிசைக் கச்சேரி நடந்தது.

பி.எஸ்.ஜி. ஐடெக் மாணவர்கள் 'நிழல்கள்' படத்திலிருந்து வெளியான 'மடை திறந்து' என்ற பாடலைப் பாடிய விதம் மடைதிறந்து பாயும் நதி அலையாய் அமைந்தது. பார்வையாளர்களின் கால்கள் தாளம் தட்ட, கரகோஷ ஒலிகளால் அரங்கமே அதிர்ந்தது. சிறப்பு விருந்தினரான வழக்கறிஞர், நடிகர் மற்றும் பாடகர் சி.ஜி.குமார், பி.எஸ்.ஜி. கல்வி நிறுவனங்களில் இசை, நடனம், பாடல் உள்ளிட்ட கலைத் துறையில் சிறந்த மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார்.



**பி.எஸ்.ஜி. கல்வி நிறுவனங்களில் இசை, நடனம், பாடல் உள்ளிட்ட கலைத் துறையில் சிறந்த மாணவர்களில் ஒருவருக்கு பரிசினை வழங்குகிறார் சிறப்பு விருந்தினரான வழக்கறிஞர், நடிகர் மற்றும் பாடகர் சி.ஜி.குமார். அருகில் பி.எஸ்.ஜி. கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள்.**

### ஆர்ப்பரித்த புல்லாங்குழல் இசை 'வெள்ளம்'!

காதம்பரி இசை நிகழ்ச்சியின் மூன்றாம் நாள், பி.எஸ்.ஜி. பப்ளிக் ஸ்கூல் மாணவ, மாணவியரின் 'இன்னிசையே.. தமிழிசையே' என்ற இசைக்கச்சேரி நடந்தது. இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, புல்லாங்குழல் ஜெயந்த் மற்றும் இசைக்குழுவினர் வழங்கிய இசை நிகழ்ச்சியில் வாசித்ததை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

இசையை ரசித்துக்கொண்டிருந்த அனைவரும் இன்னிசையில் இரண்டறக்கலந்தனர்.

### 'யுவ கலா ரத்னா' விருது வழங்கும் விழா

காதம்பரி இசை நிகழ்ச்சியின் நான்காம் நாளான ஜனவரி 7 ஆம் தேதியில் பி.எஸ்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கர்நாடக இசைத்துறை மாணவ, மாணவியர்களின் 'ஷேத்ர விஜயம்', மாஸ்டர் ராகுல் வெள்ளால் வழங்கும் 'கருணாம்ருதம்' ஆகிய பாரம்பரிய இசைக் கச்சேரிகள் மற்றும் 'யுவ கலாரத்னா' விருது வழங்கும் விழா நடைபெறுகிறது. மேலும், நிகழ்ச்சிக்கு கூடுதல் சிறப்பு சேர்க்கும் வகையில் கலை இயக்குநர் மற்றும் மூத்த பத்திரிகையாளரான கௌரி ராம்நாராயண் பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில், பி.எஸ்.ஜி.& சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன், பி.எஸ்.ஜி. மருத்துவமனை இயக்குநர் டாக்டர் புவனேஸ்வரன், பி.எஸ்.ஜி. குழுமத்தைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நிகழ்ச்சியை கண்டு ரசித்தனர்.

# கே.ஜி. மருத்துவமனைக்கு பொன்விழா ஆண்டு வாழ்த்துகள்...



## நவீன மருத்துவத்தை அறிமுகப்படுத்தியவர்

**- டாக்டர் நல்ல ஜி. பழனிசாமி, தலைவர், கோவை மெடிக்கல் சென்டர் ஹாஸ்பிடல்**

நம் மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் டாக்டர் ஜி.பக்தவத்சலம் ஆற்றிவரும் மகத்தான மருத்துவப் பணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். சிறந்த இந்தியக் குடிமகன், தலைசிறந்த மனிதர். கோயம்புத்தூரில் 1980களில் நவீன மருத்துவத்தை அறிமுகப்படுத்திய முதல் நபர். கோவை அரசு மருத்துவமனையில் நாங்கள் இருவரும் 1973 1975 காலங்களில் ஒன்றாகப் பணிபுரிந்தோம். மிகவும் சுறுசுறுப்பானவர். அவரின் கே.ஜி. மருத்துவமனையின் பொன்விழா கொண்டாட்டத்திற்கு என் சார்பாகவும், எங்கள் நிறுவனங்கள் சார்பாகவும் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.



## கொங்கு மண்டலத்தின் அடையாளம்

**கிருஷ்ணராஜ் வாணவராயர், தலைவர், பாரதிய வித்யா பவன்**

எனக்கும் அவருக்குமான நட்பு 50 ஆண்டுகளைக் கடந்தது. அன்று தொட்டு இன்று வரை எங்களது நட்பு தொடர்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் இன்று குறிப்பிட்டுச் சொன்னால் தலைசிறந்த மருத்துவர்களில் டாக்டர் பக்தவத்சலம் ஒருவராக உயர்ந்திருக்கிறார். அவரின் கே.ஜி. மருத்துவமனை கொங்கு மண்டலத்தின் அடையாளமாகத் திகழ்கிறது. அனைத்துத் தரப்பு மக்களிடத்திலும் சரிசமமாகப் பழகி சிகிச்சை அளிக்கக்கூடிய சிறந்த மனிதர். ஒரு நிறுவனம் 50 ஆண்டு பொன்விழா காண்பது சாதாரண செயல் அல்ல. இது அவரின் கடின உழைப்பை எடுத்துக்காட்டுகிறது. அவருக்கும், அவருக்கு உறுதுணையாக இருக்கும் அசோக் பக்தவத்சலத்திற்கும் என் மனமார்ந்த வாழ்த்துகள்.



## பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியது

**- ஏ.வி. வரதராஜன், தலைவர், ஏ.வி.வி. குழுமம்**

கே.ஜி. மருத்துவமனை பொன்விழாவை பெருமையாகக் கொண்டாடுவதில் மிக்க மகிழ்ச்சி. துவக்கிய சில ஆண்டுகளிலேயே தொழில்நுட்பம் மிகுந்த நவீனமான மருத்துவ உபகரணங்களை நிறுவிய பெருமை இதற்கு உண்டு. எந்த ஒரு நிறுவனமும் 50 ஆண்டுகள் சிறந்த சேவைக்குப்பின் அதன் நிறுவனரின் தலைமையிலேயே பொன்விழா கொண்டாடுவது பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியதாகும். சிறந்த முறையில் டாக்டர் பத்வத்சலத்தின் தலைமையில் பணியாற்றிவரும் மருத்துவர்கள், மற்ற அலுவலர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகள். இன்னும் பல்லாண்டு காலம் கே.ஜி. மருத்துவமனை புனிதமான சேவை தொடர எனது வாழ்த்துகள்.

## நற்சேவை செய்து வருகிறது



**- கவிஞர் வைரமுத்து**

கே.ஜி. மருத்துவமனைக்குள் நுழைந்தவர்கள் பெரும்பாலும் நலம் பெற்றுத் திரும்புகிறார்கள் என்ற நல்ல கருத்து, அந்த மருத்துவமனைக்குக் கூடுதல் சிறப்பை தருகிறது. கோயம்புத்தூருக்குப் பெருமை சேர்க்கும் அடையாளங்கள் சில உண்டு. அந்த பெருமை சேர்க்கும் அடையாளங்களில் ஒன்றாக விளங்கும் நம்முடைய கே.ஜி. மருத்துவமனை பொன்விழா அல்ல.. மேலும் மேலும் முத்து விழா, பவள விழா, நூற்றாண்டு விழா கண்டு மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன். பணிபுரியும் பெருமக்களை வணங்குகிறேன்.

## கோவையின் பெருமை



**- சத்யராஜ், நடிகர்**

கே.ஜி. மருத்துவமனையின் சேவை தொடர்ந்து சிறப்பாக நடந்து வருகிறது. குறிப்பாக, 1986ல் முத்துக்கள் மூன்று என்ற படத்தின் படப்பிடிப்பின்போது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. உடனடியாக, கே.ஜி. மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை பார்த்தோம். இன்று வரை, என் குடும்பத்தினருக்கு ஏதேனும் உடல் நலம் சரியில்லை என்றால் கே.ஜி. மருத்துவமனையைத்தான் அணுகுவோம். கோயம்புத்தூரின் பெருமை கே.ஜி. மருத்துவமனை. வாழ்த்துக்கள்.

## தலைசிறந்த முன்னோடி



**- கே.பி.ராமசாமி, தலைவர், கே.பி.ஆர். நிறுவனங்கள்**

டாக்டர் ஜி. பக்தவத்சலம் எனது இனிய நண்பர், மருத்துவத் துறையில் ஒரு தலைசிறந்த முன்னோடி. சமூக அக்கறையாளர். எப்பொழுதும் மக்களின் நலனில் அக்கறையுள்ளவர். அவர் இதுவரை மருத்துவத்துறைக்கு ஆற்றிய பணி அளப்பரியது. இனிமேலும், அவருடைய சேவை இந்த நாட்டுக்கு நீண்ட நெடிய நாட்கள் தேவை என்பதைக் கூறி அவர் நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டுமாய் வாழ்த்தி நன்றி கூறுகிறேன்.

## முதல் கார்ப்பரேட் மருத்துவமனை



**- எம்.மாணிக்கம், தலைவர், சக்தி குழுமம்**

கே.ஜி. மருத்துவமனை கோயம்புத்தூரில் உள்ள முதல் கார்ப்பரேட் மருத்துவமனையாகும், மேலும் இந்த ஆண்டு அதன் பொன்விழாவைக் கொண்டாடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். டாக்டர் ஜி.பக்தவத்சலம் அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களைக் கொண்ட ஒரு சிறந்த குழுவை உருவாக்கியுள்ளார். கே.ஜி. மருத்துவமனையில் சிகிச்சை பெரும் நோயாளிகள், அவர்களின் குடும்பத்தினரை அணுகும் முறை மிகவும் பாராட்டுக்குரியது. டாக்டர் ஜி. பக்தவத்சலம் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எனது பாராட்டுக்கள் மற்றும் சிறந்த எதிர்காலம் அமைய வாழ்த்துகள்.



## அன்பில் அரவணைக்கும் மருத்துவமனை

**- சரஸ்வதி கண்ணையன், நிர்வாக அறங்காவலர், இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள்**

மருத்துவத்தில் புதுமையாய், மகத்துவத்தில் இளமையாய், ஐம்பதாண்டு ஆனாலும், அன்பில் அரவணைத்து, பண்பில் சிறந்து விளங்கும், பக்தவச்சல பேரொளியான, கே.ஜி.மருத்துவமனையின் பொன்விழா பூப்பூக்க, பூமலர் மாலை தொடுக்க, புதுத்தென்றல் என்றும் வீச, பல்கிப்பெருகி பல்துறை மருத்துவம் வளர்ச்சி பெற்று. அனைவர் நலம் காத்து, அகிலம் போற்ற வாழ்ந்திடுக! வாழ்ந்திடுக!என்று மனமுவந்து வாழ்த்துகிறேன்.



## கோயம்புத்தூர் மக்களுக்கு ஒளிவிளக்கு

**- எம்.கிருஷ்ணன், தலைவர், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்**

கலகலப்புக்குப் பெயர் போனவர் டாக்டர் ஜி.பி. அவர் இருக்கும் இடமெல்லாம் கலகலப்பு நிறைந்திருக்கும். அவர் ஒரு உற்சாக ஊற்று. அவரின் தலைமைப் பண்பு, மனிதவள மேன்பாட்டுத் திறன், தொழில்முறை நுட்பம் ஆகியவற்றை இணைத்துப் பார்த்தால் இவர் சாணக்கியர் குலத்தில் இருந்து வந்தவரோ என்று எண்ணத் தோன்றுகிறது. தன்னிடம் வரும் நோயாளிகளின் உயிரைக் காப்பதற்காக எமனுடன் அவர் போராடுவதைப் பார்த்தால் நசிகேதன், சாவித்திரி வம்சமோ என்று தோன்றுகிறது. புராணங்களில் சொல்வது உண்டு, மார்க்கண்டேயனுக்கு அமிர்தகலேஸ்வரர் அபயம் கொடுத்தார் என்று. அதுபோலவே கோயம்புத்தூர் மக்களுக்கு ஒளிவிளக்காக இருப்பவர் டாக்டர் ஜி.பி. அவரின் நிறுவனம் பொன்விழா காண்பதற்கு நல்வாழ்த்துகள்.

## சிந்தனையை செயலாக்கும் திறன்



**- வி.ஜி. மோகன்பிரசாத், தலைவர், வி.ஜி.எம். மருத்துவமனை**

டாக்டர் ஜி. பக்தவத்சலம் உறங்குகின்ற நேரம் குறைவு, விழித்துக்கொண்டு இருக்கும் நேரம் அதிகம். ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வியைப் போதித்திருக்கிறார். லட்சக் கணக்கான மக்களுக்கு உடல் ஆரோக்கியத்தைப் பற்றிப் போதித்திருக்கிறார். அவரின் கடின உழைப்பு, அபாரமான நம்பிக்கை, ஆழ்ந்த சிந்தனை. அந்த சிந்தனையைச் செயலாகக் கூடிய செயல் திறனே கே.ஜி. மருத்துவமனையின் வெற்றிக்குக் காரணம். டாக்டர் ஜி. பக்தவத்சலம், அவரின் கே.ஜி மருத்துவமனை மென் மேலும் வளர வாழ்த்துகள்.

## மனமார்ந்த வாழ்த்துகள்



**- டாக்டர் நிர்மலா, டீன், கோவை அரசு மருத்துவமனை**

கோயம்புத்தூர் மாவட்டம், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இயங்கிவரும் மிகப்பெரிய தனியார் மருத்துவமனைகளில் ஒன்றான கே.ஜி. மருத்துவமனையின் 50வது ஆண்டு விழா கொண்டாட்டத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.



## உலகம் முழுவதும் புகழ்பெற்ற நிறுவனம்

**- நா.கார்த்திக் Ex.MLA, தி.மு.க மாவட்ட செயலாளர்**

கோவை மாவட்டத்தின் மிக சிறந்த மருத்துவமனையாக திகழ்கிறது கே.ஜி. மருத்துவமனை. சிறந்த சிகிச்சைகளை அளித்து நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் எனும் பழமொழிக்கு ஏற்ப சிறந்த முறையிலே பொதுமக்களுக்கு சேவையாற்றி வரும் மருத்துவமனைகளில் மிக சிறந்த மருத்துவமனை கே.ஜி. அனைத்து மக்களும் பாராட்டி புகழும் வகையில் மருத்துவ சேவைகளை செய்து வரும் கே.ஜி. பக்தவத்சலம், உலக முழுவதும் புகழ்பெற்ற மிக சிறந்த மருத்துவ வல்லுநர். அவருக்கு என் வாழ்த்துகள்.




## மக்களை நேசிக்கும் மனிதர்

**- எம்.வி.ரமேஷ்பாபு, முன்னாள் தலைவர், கொடிசியா**

நாட்டில் இருக்கும் கடைக்கோடி மக்களுக்கும் மருத்துவம் மலிவாகச் சென்றடைய வேண்டும் என்ற டாக்டர் ஜி.பக்தவத்சலத்தின் பார்வையே அவரின் வெற்றிக்கு அடித்தளம். மக்களை நேசிக்கும் ஒருவரால் மட்டுமே அது சாத்தியமாகும். கே.ஜி. மருத்துவமனையின் நிர்வாக அறங்காவலரும், தலைவருமான டாக்டர் ஜி. பக்தவத்சலம் மற்றும் அவரது அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர துணைப் பணியாளர்கள் குழுவிற்கு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

| 1974 | 1992 | 1996 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|---|
| KG Hospital | KG Hospital New Block | KG College of Health Sciences (Nursing , Physiotherapy, Allied Health Sciences) | KG Information Systems Private Limited | KG Laboratory, Erode | KG Diagnostic Centre, Tiruppur |





# வளர்ச்சி பாதையில் கே.ஜி. மருத்துவமனை!

டாக்டர் ஜி. பக்தவச்சலம் 1974ல் அரசு மருத்துவமனையில் பணியில் சேர்ந்தபோது, அவரின் தந்தை கே.கோவிந்தசாமி நாயுடு நாமே சொந்தமா ஆஸ்பத்திரி கட்டலாமே என்று முடிவெடுத்து, அவர் சம்பாதித்த பணம் முழுவதையும் முதலீடாக்கி மேலும் 10 லட்சம் ரூபாய் கடனை வாங்கி இப்போது கே.ஜி. மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கும் இடத்தில் அன்னூர் கே.கோவிந்தசாமி நாயுடு மெடிக்கல் டிரஸ்ட் மருத்துவமனை என்கிற பெயரில் 10 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையைத் துவக்கினார். பிறகு கே.ஜி. மருத்துவமனை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அப்போதெல்லாம் ஈ.சி.ஜி. வசதி ஹைதராபாதிலும், பாலக்காட்டில் மட்டுமே இருந்தது. ஆனால் டாக்டர் பக்தவச்சலம் அமெரிக்காவிலிருந்து வாங்கி வந்திருந்த ஈ.சி.ஜி. மெஷின் மற்றும் மூச்சு விடுவதற்கு பயன்படும் கருவி ஆகியவற்றோடு எட்டுக்கு ஆறு அளவிலான ஒரு சிறிய ஆபரேஷன் தியேட்டர் எனத் துவங்கிய கே.ஜி.யின் பயணம், கோவை நகரில் மருத்துவத் துறையில் பல புதுமைகளை செய்தது. ஜப்பானில் பயன்படுத்தப்பட்ட அல்ட்ராசோனிக் ஸ்கேனிங் மெஷினை 1980 களிலேயே அறிமுகப்படுத்தியது மற்றும் கோவையில் முதன்முதலாக எண்டோஸ்கோப்பியை அறிமுகப் படுத்திய பெருமையும் கே.ஜி. மருத்துவமனையையே சாரும்.

10 படுக்கைகள் மற்றும் 1 மருத்துவரைக் கொண்ட மருத்துவமனையாகத் தொடங்கப்பட்ட கே.ஜி. தற்போது 550 படுக்கைகள் கொண்ட மல்டி மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாகவும், அலைட் ஹெல்த் சயின்சஸ், நர்சிங் மற்றும் பிசியோதெரபி கல்லூரிகளால் அங்கீகரிக்கப்பட்ட முதுகலை மருத்துவ மையமாக வளர்ந்துள்ளது. இங்கு பயின்ற மாணவர்கள் உலகம் முழுவதும் இருக்கும் முன்னணி மருத்துவமனைகளில் பணிபுரிகிறார்கள்.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் அங்கீகரிக்கப்பட்ட "சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ்" எனும் கௌரவத்தைப் பெற்று 85 லட்சத்திற்கும் அதிகமானவர்களுக்கு சிகிச்சை அளித்துள்ளது.

'என் அப்பாவுக்கு கண் பாதிப்படைந்தபோது அதற்காக 10 லட்சம் வரை செலவு செஞ் சேன். இந்த நிலைமை பணம் இல்லாதவர்களுக்கு வந்தால் என்ன செய்வார்கள் என்கின்ற எண்ணம் எனக்கு தோன்றியது. இதற்காக சரவணம்பட்டியில் ஒரு கண் மருத்துவமனையைத் துவக்கினோம்' என்கிறார் டாக்டர் ஜி.பக்தவத்சலம். மேலும், 'ஏழைகளுக்கான இலவச கண் சிகிச்சை முகாம்களை நடத்தி ஒரு லட்சம் பேருக்கு இலவச கண்புரை அறுவை சிகிச்சை செய்துள்ளோம்' என்கிறார் பெருமிதமாக.

இந்தியா 2020 புத்தகத்தில் கே.ஜி. மருத்துவமனை

மேலும், இலவச இதய அறுவை சிகிச்சை, டயாலிசிஸ், கே.ஜி. மருத்துவமனையின் குழந்தைகள் இதயங்கள் திட்டத்தின்கீழ், 500 குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைகள் மற்றும் விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் 35,000க்கும் மேலானோர் காப்பாற்றப்பட்டது, 1998 ஆண்டின் கோவை குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட 250 பேருக்கு இலவச சிகிச்சை, கார்கில் போர், குஜராத் நிலநடுக்கம், கும்பகோணம் தீ விபத்து, சுனாமி, வெள்ளம் எனப் பல்வேறு பேரிடர் காலங்களில் அவரது மருத்துவ சேவைகளைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

இவருடைய சேவையால் ஈர்க்கப்பட்டு ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆறு தடவைக்குமேல் கே.ஜி. மருத்துவமனைக்கு வருகை புரிந்து, அவர் எழுதிய இந்தியா 2020 புத்தகத்தில் கே.ஜி. மருத்துவமனையையும் இடம்பெறச் செய்திருப்பதில் இருந்தே கே.ஜி. மருத்துவமனை கோவைக்கு எத்தனை முக்கியமானது என்பதை அறியலாம்.

டாக்டர் ஜி.பக்தவச்சலம் என்று அவர் பெயரை இணையத்தில் டைப் செய்தாலே போதும், அவர் பெற்ற விருதுகளை அறியலாம். யூடியூபில் அவர் கொடுக்கும் மெடிக்கல் டிப்ஸ் உலகப் பிரசித்தி பெற்றது. நகைச்சுவை உணர்வு ததும்ப அவர் தரும் தரமான பதிவுகள் நெட்டிசன்களால் அதிகமாக பகிரப்பட்டு உலகளாவிய ரசிகர் வட்டத்தை பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**நூல் ஆசிரியராக பரிமாணங்கள்**

இன்றும் தினந்தோறும் புத்தகங்கள் படிக்கும் வழக்கம் உள்ள பக்தவத்சலம் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் சமூகத்துக்கு ஆரோக்கியமான நலம் தரும் கருத்துக்களை சமூக ஊடகங்கள் மற்றும் செய்திதாள்கள் மூலம் சொல்ல தவறியதே இல்லை.

இதயம் ஒரு கோயில், மனசை மனசே, உயிரே உயிரே, நெஞ்சே நெஞ்சே அன்பே அன்பே, ஆனந்தம் பேரானந்தம், பல்லாண்டு பல்லாண்டு, காதல் காதல் போன்ற மக்களுக்கு வழிகாட்டும் பயனுள்ள 17 புத்தகங்களை எழுதியுள்ளார்.



KG Hospital is the first and only hospital in Coimbatore to receive

**5 NATIONAL QUALITY RECOGNITIONS**

NABH 5th Edition
National Accreditation Board for Hospitals

NABH Nursing Excellence

NABL
National Accreditation Board for Testing and Calibration Laboratories

Certificate of Wash

cGreen Operation Theatre

---

## கே.ஜி.யில் நவீன மருத்துவ சிகிச்சை



**- டாக்டர் பழனிவேல், தலைவர், ஜெம் மருத்துவமனை**

பொன்விழா கொண்டாடும் கே.ஜி. மருத்துவமனைக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள். அதனுடைய நிறுவனர் டாக்டர் ஜி.பக்தவத்சலம் மற்றும் அவருக்கு உறுதுணையாக இருக்கும் அசோக் பக்தவத்சலத்திற்கும் எனது வாழ்த்துகள். 1981ல் இருந்து கே.ஜி. மருத்துவமனை பற்றி முழு விவரம் அறிந்த ஒருவர் நான். அம்மருத்துவமனை பற்றிப் பாராட்டுவது பெருமையாக இருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் நவீன மருத்துவ சிகிச்சை கொண்டுவந்த பெருமை டாக்டர் பக்தவத்சலத்தையே சேரும். இந்த தருணத்தில், கே.ஜி. மருத்துவமனை மருத்துவர்கள், அலுவலர்களையும் மகிழ்ச்சியுடன் பாராட்டி மென்மேலும் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

## சிறந்த மருத்துவ சேவை



**- டாக்டர் மாதேஸ்வரன், தலைவர், ராயல் கேர் மருத்துவமனை**

கோயம்புத்தூர் மண்டலத்தைச் சேர்ந்த மக்களுக்கும், பிற மாவட்ட மக்களுக்கும் மற்றும் கேரளா உள்ளிட்ட அண்டை மாநில மக்களுக்கும் மாபெரும் மருத்துவப் பணியாற்றிக் கொண்டுள்ளது, இன்னும் இன்றும் தொடர்கிறது. அதன் தலைவர் புகழ்மிக்க மருத்துவர் பத்மஸ்ரீ டாக்டர் கே.ஜி. பக்தவத்சலத்திற்கு என் மனமார்ந்த வாழ்த்துகள். கடந்த 50 ஆண்டுகளாக, உலக அளவிலான தொழில்நுட்பங்களை கே.ஜி. மருத்துவமனையில் உட்புகுத்திச் சிறந்த மருத்துவ சேவையாற்றி வருகிறார். கே.ஜி. மருத்துவமனை மென்மேலும் புகழ்பெற்று மக்களுக்கான உதவிகள் அனைத்தும் வழங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

## ஈடில்லா சாதனை



**- ஸ்ரீ சுந்தர் ராமகிருஷ்ணன், இணை நிர்வாக அறங்காவலர், எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை**

கோயம்புத்தூர் மண்ணின் பாரம்பரியத்தையும், மருத்துவத்துறையின் மகத்துவத்தையும் கே.ஜி. மருத்துவமனை வெளிப்படுத்துவதோடு மருத்துவ சேவையில் ஈடு இணையில்லா தனித்துவமாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு தற்போது ஐம்பதாண்டுகளைக் கடந்து நிற்கிறது. தன்னிகரற்ற இந்தச் சமூகப் பங்களிப்பை தொடர்ச்சியாக வழங்கிவரும் கே.ஜி. மருத்துவமனையின் இந்த மகத்தான சேவை பாராட்டிற்குரியது. அனைவருக்கும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## பல்லாண்டு வாழ வேண்டும்!



**பொங்கலூர் பழனிசாமி, முன்னாள் அமைச்சர், திமுக**

டாக்டர் பக்தவத்சலம் மற்றும் அவரின் குடும்பத்தினரை 55 ஆண்டுகளாக எனக்குத் தெரியும். அவர், மேல் படிப்பிற்காக அமெரிக்கா சென்றபோது, விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்தவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அவரின் சிறந்த அணுகுமுறை, யாரிடம் பேசினாலும் நேர்மறையான வார்த்தைகள் மட்டுமே அவரிடம் இருந்து வரும். எந்த நிகழ்ச்சிக்கு அவர் சென்றாலும் பேச்சில் என்றுமே முதலிடத்தில் இருப்பவர். பக்தவத்சலத்தைப் பற்றிச் சொன்னால், சொல்லிக்கொண்டே போகலாம். அவர் பல்லாண்டு வாழ்ந்து, மருத்துவ உலகில் புதிய புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.

---



## பெருமை மிக்க அங்கம்

**- இயகாகோ சுப்ரமணியம்**

கோயம்புத்தூரின் ஒரு பெருமை மிக்க அங்கமாக கே.ஜி. மருத்துவமனை திகழ்கிறது. கே.ஜி. பாலகிருஷ்ணன், டாக்டர் ஜி.பக்தவத்சலம் தங்கள் குடும்பத்தாருடன் இணைந்து ஆரம்பித்த இந்த மருத்துவமனை இந்தியாவே பெருமைப்படும் அளவுக்கு உயர்ந்திருப்பதும், பெரும்பாலான மக்களுக்குச் சேவையாற்றிக் கொண்டிருப்பதும் பாராட்டுக்குரியது. இன்றும் சுறுசுறுப்போடு ஓடியாடிப் பணி செய்து கொண்டிருப்பவர் பக்தவத்சலம். கோயம்புத்தூரில் பல மருத்துவமனைகள் இருந்தாலும், அவைகளுக்கெல்லாம் கே.ஜி. மருத்துவமனை முன்னோடியாக உள்ளது. வாழ்த்துகள்.



## சிறப்பு மிக்க பணி

**- உமா மகேஸ்வரி, இணை நிர்வாக இயக்குநர், அனன்யாஸ் குழுமம்**

50 ஆம் ஆண்டு பொன் விழா கொண்டாடும் கே.ஜி. மருத்துவமனை தலைவர் டாக்டர் ஜி. பக்தவத்சலத்திற்கு அனன்யாஸ் குழுமத்தின் சார்பாக என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள். இத்தகைய சிறப்பு மிக்க பணியை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வரும் மருத்துவ குழுவினருக்கும், அலுவலக பணியாளர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

---

2000 KG Eye Hospital



2005 KG College of Arts and Science



2008 KGiSL Institute of Technology




2008 KGISL Tech Park (SEZ)



2015 KG Hospital Deluxe Block




2022 KG Hospital, Ganapathy



# அபய சூத்திரம்






**சென்ற வார தொடர்ச்சி :**

வெவ்வேறு நோக்கம், வெவ்வேறு தயாரிப்புமுறை மற்ற குறிப்பிட்ட நோக்கங்களுக்கு, நாம் விரும்பும் விதத்தில் செயல்படுவதற்கு, ஒரு புத்திசாலியான நூலாக அது இருக்கவேண்டியுள்ளது. இதற்கு சில உதாரணங்கள் ஆதியோகி ஆலயத்தில் உள்ள ஆதியோகி லிங்கத்தைச்சுற்றிலும் ஒருசூத்திரம் (நூல்) உள்ளது. லிங்கபைரவிக்கு நாம் சூத்திரம் (நூல்) அகற்றியுள்ளோம். ஆனால் தியானலிங்கத்தில் வனஸ்ரீயை சுற்றி சூத்திரம் (நூல்) உள்ளது அது அவ்வப்போது மாற்றப்படுகிறது. இவையெல்லாம் வெவ்வேறு முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. சாதாரணமான முறையில் ஒரு சூத்திரம் தயார்செய்வதற்கு ஒருகுறிப்பிட்ட காலம் ஆகிறது சில நேரங்களில் முப்பது முதல் நாற்பதுநாட்கள் எடுக்கிறது. அவை உடனடியாக செய்யப்பட வேண்டுமென்றால், அதற்கென்று ஒரு குறிப்பிட்ட அளவு உயிர்சக்தியை செலவிடத் தேவைப்படுகிறது.

சில வருடங்களுக்கு முன்னர், நான் பிரயாணத்தில் இருந்தபோது ஒரு குறிப்பிட்ட சூழலில், வழக்கமான முன்னேற்பாடுகள் செய்துகொள்ளாமல், நான் சில சூத்திரங்கள் தயார்செய்ய வேண்டியிருந்தது. அதற்குப் பிறகு அது என்னைப் பாதிக்காமல் இருப்பதற்குத் தேவையான செயல்களை எனக்கு நான் செய்துகொள்ளவில்லை. அடுத்த நாள் என்னால் நடக்கவே முடியவில்லை, இது என் வாழ்க்கையில் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. ஒரு ராட்சத ராட்டினத்தில் அல்லது ரோலர் கோஸ்டரில் என்னை ஏற்றினாலும், அல்லது என்னைச் சுழற்றிச் சுற்றினாலும் . எந்த இடத்திலும் மயக்கம் ஏற்படாத நான் அன்றைக்குத் தள்ளாடினேன். ஏனென்றால், முன்னேற்பாடு இல்லாமல், உடனடியாக நான் சூத்திரம் உருவாக்க வேண்டியிருந்ததே இதற்குக் காரணம்.

அடிப்படையில் சூத்திரம் என்பது ஒரு தொடர்புக்கான ஊடகம். நாம் வேறு ஒரு பொருளை பயன்படுத்த முடியும் ஆனால் ஒரு நூல் எளிதானது என்பதுடன், தயார்செய்வதற்குக் கையடக்கமாகவும் இருக்கிறது. அது நோக்கத்தைப் பூர்த்தி செய்வதாகவும், போதுமானகாலம் நீடித்திருக்கவும் செய்கிறது. ஒருவர் ஆறுமாத காலம் சாதனாவில் இருக்கிறார் என்றால், அவருக்குக் குறிப்பிட்ட விதமான சூத்திரம் அணிவிக்கப்படும். ஒருவரை மூன்று வருட கால சாதனாவில் ஈடுபடுத்தினால், அவருக்கு வேறுவகையான சூத்திரம் அணிவிக்கப்படும் ஏனெனில் அது மூன்று வருடம் நீடிக்கவேண்டும். இல்லையெனில் ஒரு நூல் மட்டுமே போதுமான காலம் நீடிக்காது என்றால், நீண்டகாலம் நீடிக்குமாறு அதனுடன் வேறுசில பொருட்களை நாம் சேர்ப்போம்.

சூத்திரம் என்பது உடலை போன்று, பொருள் தன்மையான அடித்தளம் மட்டும்தான் சக்தி என்பது வேறு. யோகத்தில், படைப்பின் தன்மையாக இருக்கின்ற உடலை ஒரு அடித்தளமாக மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம். உங்கள் உடல்கூட ஒரு அடித்தளம் மட்டும்தான். அதுவே உண்மையான ஒன்று அல்ல. அந்த விதமாகத்தான் ஒட்டுமொத்த பிரபஞ்சம் உருவாக்கப்படுகிறது.. இருப்பினும், நவீன சமூகங்களில், முற்றிலும் பொருள் தன்மையான, சில அளவுகோள்களை நிர்ணயம் செய்துள்ளோம்,. அதனால் நாம் பிரபஞ்சம் முழுவதையும் பொருள் தன்மைக்குள் வரையறுக்க முயற்சிக்கிறோம்.

சிவன் எப்படி வீரபத்திரனை உருவாக்கினார் சிவன் ஒரு சூத்திரத்தைப் பயன்படுத்தி, எப்படி ஒரு மனிதரை உருவாக்கினார் என்பதற்கு, யோக மரபில் ஒரு சம்பவம் உள்ளது. சிவனின் முதல் மனைவியாகிய சதியின் தந்தை தட்சண், ஒருமுறை வேள்வித் தீ வளர்த்து, யாகம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார். சதி அங்கு இருந்தார், ஆனால் சிவன் அங்கு இல்லை. இந்த யாகத்தின்போது தட்சன் சிவனை அவமதித்து பேசினார். அவமானத்தை தாங்க முடியாமல் சதி வேள்வித் தீக்குள் சென்றுவிட்டார். சதிக்கு அவர்கள் ஏற்படுத்திய அவமதிப்பின் காரணமாக, அவர் தன்னையே நெருப்புக்கு இரையாக்கியது சிவனுக்குத் தெரியவந்த போது, அவர் மிகுந்த கோபம் கொண்டு அவரது சடாமுடிகளுள் ஒன்றைப் பிடுங்கி ஒரு கல்லின் மீது ஓங்கி வீசியதில், வீரபத்ரன் என்ற ஒரு மறைஞான வீரன் உயிர்வரப் பெற்றான்.

சிவன் அவனைக் கட்டவிழ்த்து விட்டார், அதனால் வீரபத்திரன் சம்பவ இடத்திற்குச் சென்று யாகத்தில் கலந்துகொண்டு சதியின் மரணத்தைத் தடுப்பதற்கு எதையும் செய்யாத ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை வெட்டி வீழ்த்தினான். சிவன், "என் மனைவி நெருப்பில் நடந்தாள். அதைத்தடுத்திருக்க வேண்டும் என்று ஒருவரும் நினைக்கவில்லை நீங்கள் அங்கு அமர்ந்து வேடிக்கைதான் பார்த்தீர்கள்" என்று கூறியதுடன் மேலும் அவர் தொடர்ந்துவராக, "நீங்கள் ஒவ்வொருவரும் இறக்கவேண்டும்," என்றார். வீரபத்ரனும் தட்சணை கழுவிலேற்றினான்.

பலவகையான சூத்திரங்கள் சிவன் அவரது முடியைப் பயன்படுத்தி வீரபத்ரனை உருவாக்கினார். சூத்திரம் இயற்கையானதாக, அதன் தன்மை மாறாமல் இருந்து, மஞ்சள் மற்றும் ஈரப்பதத்துடன் இருந்தால், ஒரு சில நொடிகளில் அதை உங்கள் உடலின் ஒரு பகுதியாக உருவாக்கமுடியும். சூத்திரம் என்பது எதையும் ஒன்றாக இணைக்கும் ஒரு நூலாக இருக்கின்றது.

பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் ஒரு நூல் மட்டும்தான். இந்த நூலைக் கையாள்பவர்களின் திறனைப் பொறுத்து மண் (உருண்டைகள்) மணிகள், முத்துக்கள், வைரங்கள் அல்லது அவர்களின் உயிர் சக்தியை அதனுடன் இணைக்கலாம். ஒரு நூலுடன் பலவற்றைக்கோர்க்க முடியும். உடலின் எந்த பாகத்தின் மீது நூலைக்கட்ட வேண்டும் என்பதைப் பொறுத்து உங்கள் இடை அல்லது கழுத்தை சுற்றிக் கட்டுவதாக இருக்கலாம் அது வித்தியாசமாகவும், அதிக விரிவான முறையிலும் தயார் செய்யப்பட வேண்டும் கையை சுற்றிக்கட்டப்படும் சூத்திரம் மிக எளிமையானது, ஏனெனில் அது மிகவும் பிரத்யேகமான மற்றும் வரம்புக்குட்பட்ட நோக்கம் கொண்டது. அதற்கு மேலும் விரிவான நோக்கம் இருந்தால், அதிக விரிவான முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

ஜடப்பொருட்களின் புத்திசாலித்தனம் ஜடப்பொருட்கள் என்று அழைக்கப்படுபவை கூட ஒரு குறிப்பிட்ட முறையில் செயல்படுகின்றன. ஒரே மாதிரியான விதையை வெவ்வேறு இடங்களில் விதைத்தீர்கள் என்றால், மண்ணின் தரம், சூழல், மற்றும் எத்தனை யோ பலகாரணங்களுக்கு ஏற்றாற்போல. அது வளர்ந்து, வித்தியாசமான பலன் அளிக்கிறது. மண் ஜடப் பொருளாக இருக்கலாம், ஆனால் அதற்கென்று குணாதிசயங்கள் உள்ளன. அது எப்படி செயல்பட விரும்புகிறதோ அப்படி செயல்படுகிறது.

ஜடப்பொருட்களுக்கு வேறொரு விதமான புத்திசாலித்தனம் இருக்கிறது. நவீன சமூகங்கள் புத்திசாலித்தனத்தை, காரண அறிவு மற்றும் சிந்திக்கும் திறன் என்றே புரிந்துகொள்கிறது. ஆனால் உண்மையில் சிந்திக்கும் திறன் மூலம் உங்களால் எதையும் புரிந்துகொள்ள முடியாது. உங்களது உடலில் இயற்கையாக என்ன நிகழ்கிறது என்பது சிந்தனைத் திறனுக்கும் அப்பாற்பட்டது, ஆனால் நாம் இந்த புத்திசாலித்தனத்தை அடையாளம் கண்டுகொள்வதில்லை. புத்திசாலித்தனம் என்றால் குறிப்பிட்ட விதமான என்ணங்கள் மட்டும்தான் என்று நாம் நினைத்துக்கொள்கிறோம்... சூத்திரம் என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு செயல்படும் வகையில், நம்மால் உருவாக்கக்கூடிய ஒரு புத்திசாலியானநூல்.


### ஆசிரியர் குறிப்பு

அபய சூத்திரம் தேவி அபயசூத்திரம் என்பது பிரத்யேகமாக பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு பருத்திநூல். அதனை மணிக்கட்டில் கட்டிக்கொள்ளும்போது, அது ஒருவரின் பயத்தைப்போக்கவும், விருப்பங்களை நிறைவேற்றவும் உறுதுணையாக இருக்கும். பெண்கள் அதை இடது மணிக்கட்டிலும், ஆண்கள் வலது மணிக்கட்டிலும் அணிவார்கள். இதனை குறைந்தபட்சம் 40 நாட்களுக்கு அணிந்திருக்க வேண்டும். இதன் முடிச்சை அவிழ்ப்பதன் மூலம் அல்லது நெருப்பில் வாட்டுவதன் மூலம் அவிழ்க்கலாம். அதன்பிறகு ஈரமான மண்ணில் புதைத்து விடலாம் அல்லது அதனை எரித்து அந்த சாம்பலை தொண்டைக் குழியிலிருந்து கீழே நெஞ்சுக்குழி வரை பூசிக்கொள்ளலாம்.

சர்ப்ப சூத்திரம் சுருண்ட பாம்பின் வடிவத்திலுள்ள பிரதிஷ்டை செய்யப்பட்ட செம்பு மோதிரம், சர்ப்ப சூத்திரமாகும். ஓர் உலோக மோதிரத்தை, குறிப்பாக தாமிரத்தால் ஆன ஒன்றை மோதிர விரலில் அணிவதென்பது, உடலை உறுதிப்படுத்துகிறது. மேலும், ஒரு சாதகருக்கு சாதனாவிற்கான அல்லது ஆன்மீக செயல்முறைக்கான அடிப்படை ஆதரவை வழங்குகிறது. முறையான சாதனாவுடன் சர்ப்ப சூத்திரத்தை அணிவது, வாழ்க்கையின் சூட்சும பரிமாணங்களுக்கான ஒரு திறவுகோலாக மாறும்.

# நானோ தொழில்நுட்பத்தில் ஐ.ஐ.டி. தலைசிறந்து நிற்கிறது

**-ஆர்.சாரதி, டீன், இந்தியத் தொழில்நுட்பக் கழகம் [ஐ.ஐ.டி. மெட்ராஸ்]**



மாணவருக்கு பட்டம் வழங்குகிறார் சிறப்பு விருந்தினர் மெட்ராஸ் இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் டீன் பேராசிரியர் ஆர். சாரதி. உடன், பி.எஸ்.ஜி. அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன், பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி செயலாளர் மோகன்ராம், கல்லூரி முதல்வர் சரவணகுமார் மற்றும் துறைத்தலைவர் ஆகியோர்.

✍ தி கோவை மெயில்

பி.எஸ்.ஜி. தொழில்நுட்பம் மற்றும் பயன்சார் ஆராய்ச்சிக் கல்லூரியின் 5 வது பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

பி.எஸ்.ஜி. அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் (ஐ.ஐ.டி. மெட்ராஸ்) டீன் பேராசிரியர் ஆர்.சாரதி சிறப்புரையாற்றுகையில், 'தற்போது இந்தியாவில் பேசப்படும் ஓர் அடிப்படை விஷயமாக, திறன் மேம்பாடு உள்ளது. நிலவின் தென்துருவத்தில் சந்திராயன்3 வெற்றிகரமாகத் தரையிறக்கி சாதனைப்படுத்தியத்தில் நாம் அனைவரும் பெருமையடைய வேண்டும். அதில் பி.எஸ்.ஜி. கல்லூரியின் முன்னாள் மாணவர்களும் பங்களித்துள்ளனர் என்பது மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

அனைத்துத் தொழில்நுட்ப பொருட்களிலும், இந்தியர்களின் பங்களிப்பு என்பது கட்டாயம் இருக்கிறது. வருங்காலங்களிலும் தொழில்நுட்ப வளர்ச்சியில் மாணவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. தடைகளை நினைத்து வருந்தாமல் மாணவர்கள் தங்களது எண்ணம் மற்றும் பாதையினை தெளிவாகத் திட்டமிட்டுத் தேர்வு செய்தால், வாழ்வில் பெரும் வெற்றியடைய அடைய முடியும். ஐஐடி மெட்ராஸ், நானோ துகள்கள் உற்பத்தியில் உலகளவில் ஆறில் ஒன்றாக உயர்ந்து இருக்கிறது. தொழில்நுட்பத்தை மாற்றியமைப்பது மிகவும் முக்கியமானது.

இடைநிலை சிந்தனைகளினால் தொழில்நுட்ப அமைப்பின் நம்பகத்தன்மையை மேம்படுத்த முடிகிறது. மேலும், தொழில்நுட்பத் துறையில் வெற்றியடைவது தனிப்பட்ட ஒருவரால் சாத்தியமாகாது. எனவே உங்களுக்கான குழுவினை அமைத்துக்கொண்டு திறம்பட செயல்பட வேண்டும். எண்ணங்களை உறுதியாகவும், ஆக்கப்பூர்வமாகவும் செயல்படுத்த வேண்டும். வாழ்வில் எந்த உயர்விற்கு சென்றாலும் பெற்றோரை மறந்துவிடக் கூடாது' என்றார்.

பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி செயலாளர் மோகன்ராம் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் சரவணகுமார், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், பட்டம் பெற்ற மாணவர்களின் பெற்றோர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

To Advertise in
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

# கல்வியில் தொழில்நுட்ப புரட்சி

**டாக்டர் என்.ஜி.பி. கல்வியியல் பட்டமளிப்பு விழாவில் நல்ல ஜி பழனிசாமி பேச்சு**

✍ தி கோவை மெயில்




கல்வியியல் ஆசிரியருக்கு பட்டம் வழங்குகிறார் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைத் தலைவர் மருத்துவர் நல்ல ஜி.பழனிசாமி. உடன், சிறப்பு விருந்தினர் சென்னை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் மற்றும் தலைவர் குமாரசாமி, கல்விசார் இயக்குநர் முத்துசாமி, கல்லூரி முதல்வர் இராமசாமி உள்ளிட்டோர்.

டாக்டர் என்.ஜி.பி. கல்வியியல் கல்லூரியின் 16ஆவது பட்டமளிப்பு விழாவில் 201819, 201921, 2020 22 ஆகிய கல்வி ஆண்டுகளில் கல்வியியல் பட்டப்படிப்பை முடித்த 255 மாணவர்கள் பட்டம் பெற்றனர்.

கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைத் தலைவர் மருத்துவர் நல்ல ஜி. பழனிசாமி தலைமை வகித்துப் பேசுகையில், "பட்டம் பெற்ற ஆசிரியர்கள் ஒழுக்கத்துடன் கூடிய நல்ல தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். மனிதனுக்கு அறிவுதான் முக்கியமானது. அறிவுதான் செல்வம். அத்தகைய அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி போன்று கல்வியிலும் தொழில்நுட்பத்தால் புரட்சி ஏற்பட்டுள்ளது. இன்றைய சூழலில் எங்கும் எதிலும் கல்விக்கான வாய்ப்புகள் நிறைந்துள்ளன. மாணவர்களின் திறனை மேம்படுத்துவதே ஆசிரியர்களின் தலையாய கடமையாக இருக்க வேண்டும்" என்றார்.

சிறப்பு விருந்தினர் சென்னை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் மற்றும் தலைவர் குமாரசாமி பட்டம் வழங்கி சிறப்புரையாற்றுகையில், "தனிமனித ஒழுக்கமும், தனிமனித வளர்ச்சியுமே நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படை. மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் துணை நிற்க வேண்டும். மாணவர்களுக்கு வழிகாட்டல் தரும் ஆசிரியராகத் திகழ வேண்டும். உயர்ந்த குறிக்கோளோடு எச்செயலையும் முழு ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். அப்போதுதான் உயர்ந்த நிலையை அடைய முடியும். சிறந்த அறிவுடன் நற்பண்பாளராக விளங்கிப் பெற்றோருக்கும் படித்த கல்லூரிக்கும் பெருமை சேர்க்க வேண்டும். கண்டிப்பு கலந்த அன்பான ஆசிரியராகவும் மாணவர்களின் எதிர்பார்ப்பை நிறைவாக்கும் திறன் கொண்ட ஆசிரியராகவும் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும்" என்று வாழ்த்தினார்.

பட்டம் பெற்ற மாணவர்கள் விழா உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். கல்லூரி முதல்வர் இராமசாமி வரவேற்புரை வழங்கினார்.

டாக்டர் என்.ஜி.பி. கல்வியியல் கல்லூரியின் செயலர் தவமணி தேவி பழனிசாமி, டாக்டர் என்.ஜி.பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளை அறங்காவலர் அருண் பழனிசாமி, தொழில் மேம்பாட்டு நிறுவன இயக்குநர் மதுரா பழனிசாமி, கல்விசார் இயக்குநர் முத்துசாமி, முதன்மைச் செயல் அலுவலர் புவனேசுவரன், முதன்மை இயக்கு அலுவலர் நடேசன் ஆகியோர் பங்கேற்றனர். டாக்டர் என்.ஜி.பி. கல்விக் குழுமத்தைச் சார்ந்த பல்வேறு கல்லூரி முதல்வர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# கே.பி.ஆர். கல்லூரியில் காளையர் திருவிழா

✍ தி கோவை மெயில்

கே.பி.ஆர். கலை, அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி மற்றும் கோவை ரேக்ளா அமைப்பு இணைந்து நடத்தும் காளையர் திருவிழா (ரேக்ளா ரேஸ்) கொண்டாடப்பட்டது. நான்காம் ஆண்டாக நடத்தப்படும் இப்பந்தயத்தினை கே.பி.ஆர் குழுமத்தின் தலைவர் ராமசாமி மற்றும் அவரின் துணைவியார் தலைமையேற்று துவக்கி வைத்தனர்.

200, 300 மீட்டர் என இரு பிரிவுகளில் நடத்தப்பட்ட இப்பந்தயத்தில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 400க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். வெற்றிபெற்றோருக்கு முதல் பரிசாக ஹோண்டா ஆக்டிவா, இரண்டாம் பரிசாக ஒரு பவுன் தங்க நாணயம், மூன்றாம் பரிசாக 3/4 பவுன் தங்க நாணயம், நான்காம் பரிசாக 1/2 பவுன் தங்க நாணயம், ஐந்தாம் பரிசாக 1/4 பவுன் தங்க நாணயம், ஆறு முதல் பத்தாம் பரிசாக 1 கிராம் தங்க நாணயங்கள் வழங்கப்பட்டன. மேலும் முதல் 30 இடங்களைப் பிடித்தப் போட்டியாளர்களுக்கு வெள்ளிநாணயங்கள் பரிசாக வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.



கே.பி.ஆர். கல்லூரியில் நடைபெற்ற ரேக்ளா ரேஸில் சீறிப்பாயும் காளைகள்

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan

## ஆசிய சிலம்பம்: இந்துஸ்தான் பள்ளி மாணவர் அசத்தல்



வெற்றி பெற்ற மாணவர் அ.ரூபேஷ் குமார்

தி கோவை மெயில்

இந்துஸ்தான் மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு மாணவர் அ.ரூபேஷ்குமார், நாகர்கோவில் பகுதியில் நடைபெற்ற ஆசிய அளவிலான சிலம்பம் போட்டிகளில் வெற்றி பெற்றார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக சிலம்பம் போட்டிகளில் விளையாடி வரும் இவர், சர்வதேச அளவில் மூன்று விதமான போட்டிகளில் பரிசு பெற்றார். இவர் சிலம்பம் குழு விளையாட்டுப் போட்டியில் முதல் பரிசும் தங்கப்பதக்கமும் பெற்றுள்ளார். சிலம்பத்தில் குதிவரிசை தனிநபர் போட்டியில் இரண்டாம் பரிசும் வெள்ளிப்பதக்கமும் பெற்றுள்ளார். தனிநபர் கம்பு சண்டைப் போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்றிருக்கிறார். இப்போட்டிகளில் சிறப்பாக வெற்றி பெற்றதுடன், தற்போது சர்வதேச அளவிலான சிலம்பம் போட்டியில் கலந்துகொள்ளத் தேர்வாகி உள்ளார்.

பரிசுகளும் பதக்கங்களும் வென்ற மாணவர் ரூபேஷ்குமாரை, இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், செயலர் டாக்டர் பிரியா சதீஷ்பிரபு, பள்ளி முதல்வர் செண்பகவல்லி உள்ளிட்டோர் பாராட்டினார்.

## தொழிற்சாலைகளின் வளர்ச்சி சரிவு

தி கோவை மெயில்

இந்தியாவில் தொழிற்சாலைகளின் வளர்ச்சி விகிதம் குறைந்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

வளரும் நாடுகள், வளர்ந்த நாடுகள் என்று பிரிக்காமல் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் தொழிற்சாலைகளின் பங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இந்தியாவில் கடந்த 18 மாதங்களில் இல்லாத அளவுக்குத் தொழிற்சாலைகளில் உற்பத்தி விகிதம் சரியத் தொடங்கி இருக்கிறது. அதேபோலவே, புதிய ஆர்டர்கள் பெறுவதில் கடினமான சூழல் காணப்படுவதாகத் தர ஆய்வில் தெரியவந்துள்ளது.

சர்வதேச தேவைகள் குறைந்திருப்பதும், ஆறு மாதங்களில் இல்லாத அளவிற்கு ஏற்றுமதி குறைவு போன்ற காரணிகளால் தொழிற்சாலைகளின் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



# ஆரோக்கியமான மனநலத்தை பேணுவது எப்படி?

- ஜி.கே.என்.எம். மருத்துவமனை மன நல மருத்துவர் வர்ஷா விஸ்வநாதன்

வெ.சீ.அனிஷா, தி கோவை மெயில்

### தற்போதைய வாழ்க்கை முறை, உடல் மற்றும் மனநிலையை எவ்வாறு பாதிக்கிறது?!

2010 ஆம் ஆண்டிற்குப் பிறகு மக்களின் அன்றாட வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க உடல் இயக்கம் இல்லாமல், சுறுசுறுப்பற்ற நிலையில் வேலை செய்கின்றனர். மேலும், அன்றாடத் தேவைக்கான அனைத்துப் பொருட்களும் எளிதில் கிடைக்கும் வகையில் மாறிவிட்டன. இதனால் மக்களின் சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம் என உடல் நலம் மெல்ல மெல்ல பாதிப்படைகிறது. இந்த பாதிப்புகளை சந்திப்பவர்களும், மன நலத்தில் பாதிப்படைவது குறிப்பிடத்தக்கது. அதாவது, சர்க்கரை நோய், தைராய்டு போன்ற நோய் உள்ளவர்களுக்கும் மன அழுத்தம் ஏற்படும்.

இது தற்போதைய வாழ்க்கை முறையில் உடல் மற்றும் மனநிலையை பாதிப்பதற்கு முதல் காரணமாக அமைகிறது. மேலும், தொலைக்காட்சி, மொபைல், லேப்டாப் போன்றவற்றின் பயன்பாடுகளும் அதிகரித்து வருகின்றன. இதனால், திரைப் பயன்பாட்டின் எண்ணிக்கையுடன் அதில், பார்ப்பதற்கான உள்ளடக்கங்களின் வகைகளும் அதிகமாகிவிட்டன. இந்த இரண்டு காரணங்களால் தற்போதைய நவீன வாழ்க்கை முறையில் உடல் மற்றும் மனநிலையை பாதிக்கும் பிரச்னைகள் அதிகளவில் ஏற்படுகிறது.





### பணி இடத்தில் வேலை அழுத்தத்தை சமாளிப்பது எப்படி?

பணியிட அரசியல் மற்றும் தொழில் அழுத்தம், திருப்தியற்ற ஊதியம்/சம்பளம், கடின உழைப்புக்கு அங்கீகாரம் இல்லாதது போன்றவை பணியிட மன அழுத்தத்திற்கு வழிவகுக்கிறது.

இந்திய அமைப்பின் பணியிடத்தில், ஒரு படிநிலை உள்ளது. அங்கு தனக்குக் கீழ்நிலையில் உள்ள அதிகாரிகளின் மீது கோபத்தைத் திணிப்பது வழக்கம். இதனால் அவர்களுக்கு வேலை சுமை அதிகரித்து மன அழுத்தமும் ஏற்படுகிறது. எனவே, அவர்களிடம் கோபத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பு, தனக்கு மேல் இருக்கும் அதிகாரி நம்மைப் பேசினால் அவர்களுக்கும் இதே நிலையைப் போன்றே இருக்கும் என்பதைப் புரிந்துகொண்டு, பிரச்னைகளைக் கையாள வேண்டும்.

### கவனத்துடன் செயல்பட வேண்டும்!

பதற்றம் அல்லது அமைதியின்மை என்பது அவ்வப்போது மக்களை பாதிக்கிறது. பதற்றத்தின் தீவிரத்தன்மை ஒவ்வொரு நிலையிலும் வேறுபட்டு தீவிரமடைகின்றது. இதனை சமாளிப்பதற்கு பல்வேறு வழிமுறைகள் இருந்தாலும் ஒருகட்டத்தில் நமது சுய அறிவை இழக்கும் வகையில் தீவிரமாக பாதிக்கிறது.

பதற்றம் ஏற்படும்போது இரண்டு விஷயங்களை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். முதலில், அதனை முன்னேச்சரிக்கையுடன் கட்டுப்படுத்துவது. அதாவது, சிறிய உடற்பயிற்சி, யோகா, தியானம் போன்றவற்றை பின்பற்றுதல். அடுத்ததாக, அந்தத் தருணத்தில் அதனை எப்படி சமாளிப்பது என்பதாகும். இதற்கு ஆழ்ந்த மூச்சுப் பயிற்சி, குறிப்பிட்ட இடத்திலிருந்து வெளியேறுதல் போன்றவை உதவுகிறது.







**நம் மனநலம் ஆரோக்கியமாக இருப்பதற்கு முறையான உடற்பயிற்சி, உணவுப் பழக்கங்கள், நல்ல தூக்கம் போன்றவை மிகவும் அவசியமானது.**

### பயனுள்ளதாக பார்க்க வேண்டும்!

இன்றைய சூழலில் திரை நேரத்தை முழுமையாகத் தவிர்க்க முடியாது. ஆனால் நம்மால் முடிந்த அளவிற்கு கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், பார்க்கும் உள்ளடக்கங்களும் பயனுள்ளதாக இருக்க வேண்டும். இது நம்மை ஆரோக்கியமான மனநிலையில் பாதுகாப்பதற்கு வழிவகுக்கிறது. மேலும், நம் மனநலம் ஆரோக்கியமாக இருப்பதற்கு முறையான உடற்பயிற்சி, உணவுப் பழக்கங்கள், நல்ல தூக்கம் போன்றவை மிகவும் அவசியமானது.

பொதுவமாக மனநலத்தில் பிரச்னை இருந்தே பாதிலும், அதனை சரிசெய்யாமல் மிகவும் மோசமான நிலைக்குச் சென்ற பிறகு, மருத்துவரை அணுகுகின்றனர். இதனைத் தவிர்த்து, ஆரம்ப நிலையிலேயே மருத்துவரை அணுகுவது மனநல பாதிப்பிலிருந்து நம்மை தற்காத்து, ஆரோக்கியமான வாழ்க்கையை மேம்படுத்த உதவுகிறது என்றார் மருத்துவர் வர்ஷா.

## புற்றுநோய் இல்லாத கோவையை உருவாக்க வேண்டும்

- லதா பாலசுப்ரமணியம், மகளிர் புற்றுநோய் சிகிச்சை மருத்துவர், ஜி.கே.என்.எம்




முகாமில் பங்கேற்ற மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள்

தி கோவை மெயில்

கோவை விழாவின் 16 ஆம் ஆண்டு பதிப்பின் ஒரு பகுதியாக, கோ.குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனையில், பெண்களுக்கான இலவச கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய்க்கான பரிசோதனைகள் வழங்கப்பட்டன.

இதில் நாற்பதிற்கும் மேற்பட்ட பெண்கள் பயன் பெற்றனர். ரூபாய் 2500 மதிப்பிலான பரிசோதனைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இம்முகாம் மகளிர் புற்றுநோய் அறுவை சிகிச்சை மருத்துவர் லதா பாலசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. இதுகுறித்து அவர் கூறுகையில், பெண்களை தாக்கும் புற்றுநோய்களில் கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய்கள் முதன்மையானதாகும். இதுகுறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, பெண்களுக்குப் புற்றுநோய் அறிகுறிகள் தென்பட்டால் தாமாக முன்வந்து பரிசோதித்துக்கொள்ள வேண்டும். அனைத்து வயதினர் பெண்களும் ஹெச்.பி.வி. வைரஸ்க்கான தடுப்பூசிகள் போட்டுக்கொள்வது கட்டாயம். புற்றுநோய் இல்லா கோவையை உருவாக்குவதே ஜி.கே.என்.எம் மருத்துவமனையின் தலையாய நோக்கமாகும். இதன் ஒரு முயற்சியாக, வாரந்தோறும், அனைத்து வியாழக்கிழமைகளிலும், பெண்களுக்கான இலவச கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய்க்கான பரிசோதனைகள் இலவசமாக வழங்கப்படுகிறது என்றார்.







1.5 CRORE HAPPY CUSTOMERS
பொங்கல் சிறப்பு விற்பனை
TVS
TVS XL100
வேலையில் கில்லாடி சேமிப்பில் முன்னோடி
₹2100*
கேஷ் டிஸ்கவுண்ட்
₹43999#
லிருந்து ஆரம்பம்
^^ Use Scheme Code SPL_S_9552 at your nearest dealership to avail this offer.
என்னை ஸ்கேன் செய்யுங்கள்
1800 3157 100
15% அதிக மைலேஜ்+
சைலன்ட் ஸ்டார்ட் 2018 லிருந்து ஈஸி ஆன்-ஆஃப் ஸ்விட்ச்
மொபைல் சார்ஜர்^
டிடாச்சபிள் ரியர் சீட்
குறைந்த முன் பணம் ₹3333^^ லிருந்து ஆரம்பம்
* Offer valid for a limited period only. T&C apply. # Ex-showroom price of TVS XL100 Heavy Duty Kick Start variant in Tamil Nadu. T&C apply. + Based on TVSM internal test conditions. As compared to BS-IV models. T&C apply. ^ Mobile charger is available in select variants. T&C apply. ^^ Finance at the sole discretion of the financier. T&C apply.


PONGAL SPECIAL SALE
TVS
Zest 110
BUILT FOR PERFORMANCE. BUILT FOR YOU.
₹2100* CASH DISCOUNT
NOW AVAILABLE AT ₹68 798/-*
EX-SHOWROOM PRICE
ET Fi ECOTHRUST 110cc 15% MORE MILEAGE*
ENHANCED STYLE QUOTIENT
WIDE SEAT
19 LITRES STORAGE*
SCAN ME
TVS CREDIT
SHRIRAM Finance
IndusInd Bank
IDFC FIRST Bank ALWAYS YOU FIRST
www.tvsmotor.com/tvs-zest
T&C apply.**Ex-Showroom Price of TVS Zest Base Gloss Variant Tamil Nadu. Prices subject to change without prior notice. ^5 Years Warranty without any additional charges.
#Finance at the sole discretion of the financier and offers cannot be clubbed together. Accessories shown in the ad may not be a part of standard equipment.
Coimbatore: Authorised Main Dealer : • Mettupalayam Road : Lotus TVS – 9842230030 • Avinashi Road : Sri Sakthi Saradha TVS – 8925801467 • Trichy Road : Sri Sakthi Saradha TVS – 7094455457 • Gandhipuram : Vishnu TVS – 9942910423 • Vadavalli : KMB TVS – 7092615575 • Sundarapuram : Shri Venkateswar TVS – 9865551234 • Vadamadurai : Lotus TVS – 9715433999 • RS Puram : Lotus TVS – 99842235115 • Velandipalayam : Lotus TVS – 9842303900 • Saravanampatti : Vishnu TVS – 9942910438 • Kuniyamuthur : Shri Venkateswar – 9842213162 • Sulur : Bharath TVS – 8012579779. • Mettupalayam : Sri SPS TVS – 8870474890 • Pollachi : Sarathy TVS – 9787772058 • Kinathukadavu : Shri Venkateswar TVS – 9442242882.
Tiruppur : Authorised Main Dealer: • Tiruppur : RA TVS – 9842248400 • Avinashi Road : Bharath TVS – 9842264564 • Uthukuli Road : RA TVS – 9842248400 • Palladam Road : Abirami TVS – 9443713322 • Kangeyam Road : RA TVS – 9443970220 • Perumanallur Road : Bharath TVS – 7373064564 • Palladam : Bharath TVS – 9842264564 • Avinashi : SV TVS – 9788857599 • Dharapuram : RKS TVS – 9894090772 • Kangeyam : RKS TVS – 9894091772 • Vellakovil : RKS TVS – 9003960772 • Perumanallur : RR TVS – 7200088811 • Udumalpet : Sri Varsini TVS – 9715595333.